செய்தி வெளியீடு

செ.வெ.எண்.59 நாள்:27.08.2019

**நீலகிரி மாவட்டம் இத்தலார், நஞ்சநாடு மற்றும் முள்ளிகூர் ஊராட்சி பகுதிகளில் கன மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இன்று (27.08.2019) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.**

இத்தலார் பஜார் பகுதியில் உள்ள தானியங்கி தண்ணீர் இயந்திரத்தினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டு, பின்னர் கன மழையால் பாதிக்கப்பட்ட இத்தலார் ஊராட்சிக்குட்பட்ட வினோபாபாஜி நகர், திவ்யா நகர், நஞ்சநாடு ஊராட்சிக்குட்பட்ட காட்டுக்குப்பை, எமரால்டு வேலி, இந்திராநகர், முள்ளிக்கூர் ஊராட்சிக்குட்பட்ட அவலாஞ்சி பவர்ஹவுஸ், இன்பசாகர் நகர், நியூ அட்டுபாயில் ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும் மறுசீரமைப்பு பணிகளை மிக துரிதமாக செய்து மக்கள் பயன்பாட்டிற்கு உடனடியாக கொண்டு வருமாறு துறை சார்ந்த அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தற்காலிக வீடுகள் அமைக்கும் இடங்களை பார்வையிட்டு அங்குள்ள மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

இந்த ஆய்வின் போது உதகை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.ரமேஸ்கிருஷ்ணன், திரு.சந்திரசேகர் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.